


எனக்குப் பிடித்த
கதை
கவிதை
கட்டுரை :
எது?
- முதல்வர் கலைஞர்

எனக்குப் பிடித்த
கதை - கவிதை - கட்டுரை; எது?

தலைவர் **கலைஞர்**



தலைமைக் கழக வெளியீடு:

திராவிட முன்னேற்றக் கழகம்

"அண்ணா அறிவாலயம்"
367 & 369, அண்ணா சாலை,
சென்னை – 600 018.

முதற்பதிப்பு : ஜூலை 2008

விலை : ரூ.3.00

35 no
க.இ.ப, கிளை 83
சென்னை

அச்சிட்டோர் : மாருதி பிரஸ்
173, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வகம் நூல்
நிலையம்
சென்னை-113

எனக்குப் பிடித்த கதை - கவிதை - கட்டுரை; எது?

சென்னை – கலைவாணர் அரங்கில் 26.7.2008 அன்று அறிஞர் பேரவை, பன்னாட்டு கருத்தரங்கம் சார்பில் கலைஞர் படைப்புலகம் நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

அன்பார்ந்த தமிழ்நாடு அறிஞர் பேரவை நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் ஆய்வுக் கோவை வெளியீட்டு விழா நிகழ்ச்சிக்கு தலைமையேற்றிருக்கின்ற எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களே, தொடக்கவுரை நிகழ்த்திய தம்பி மாண்புமிகு ஆ. இராசா அவர்களே, ஆய்வுக் கோவையை வெளியிட்ட அற்புதமான ஓர் உரை நிகழ்த்திய தமிழர் தலைவர் மானமிகு வீரமணியார் அவர்களே, இந்தப் பெரிய நூலினைப் பெற்றுக் கொண்டு அரிய உரை நிகழ்த்திய பேராசிரியர் அகத்தியலிங்கனார் அவர்களே, கருத்துரை என்ற பெயரால், நான் எழுதிய எல்லா நூல்களையும் படித்து, இந்தப் படிப்பை பள்ளிக் கூடத்திலே படித்திருந்தால் (சிரிப்பு) பல வகுப்புகளில் முன்னேறி வந்திருக்கலாம் என்றாலுங்கூட – இங்கே எல்லாவற்றையும் படித்து, எல்லா கவிதைகளைப் பற்றியும், எல்லா உரையாடல்களைப் பற்றியும், உரைகளைப் பற்றியும் நீண்ட உரை ஒன்றினை ஆற்றி தாத்தா சொல்கிற வரையில் பேச்சை நிறுத்தமாட்டாள் என்கிற ஒரு நிலையை நீங்கள் எல்லாம் தெரிந்து கொள்கிற அளவிற்கு – ஆனால்

அழகான உரை (கைதட்டல்) நான் எதிர்பார்க்காத உரை – இவ்வளவும் பேசுவாளா (பேசுவாளா என்று வேறு மொழியிலே பேசி விட்டேன் (சிரிப்பு) மன்னிக்கவும் – அவையோர் மன்னிக்கவும் – கயல்விழியிடம் மன்னிப்பு கேட்கவில்லை) அந்த அளவிற்கு ஒரு அற்புதமான உரையை மிக அழகாக இங்கே ஆற்றிய கயல்விழிக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

வரவேற்புரை நிகழ்த்திய பேராசிரியர் முனைவர் வேலுசாமி அவர்கள் தான் முன்னின்று பெருமுயற்சி செய்து – அவர்கள் ஆற்றுகின்ற அரும் பணிகளுக் கிடையே இந்த அற்புதமான நூலை ஏறத்தாழ 200க்கு மேற்பட்ட அறிஞர் பெருமக்களிடம் ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்று, அதிலே தேர்வு செய்த கட்டுரைகளையெல்லாம் தொகுத்து வெளியிட்டு என்பால் அவருக்குள்ள அன்பை, நட்பை, மதிப்பை, ஆர்வத்தை, என்னை விட அதிகமாக அவருக்கு தமிழ் மீதும், தமிழர்கள் மீதும், தமிழ்நாட்டின் மீதும் உள்ள அசைக்க முடியாத ஆர்வத்தை வெளிப்படுத்தி அரியதோர் உரை நிகழ்த்தியிருக்கிறார். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளை இன்னும் ஊக்கத்தோடு செயல்பட வேண்டுமென்கிற உந்துதலை இந்த விழாவிலே நான் வழங்குகின்றேன்.

நன்றியுரை ஆற்றவிருக்கின்ற பேராசிரியர், முனைவர் கஸ்தூரி ராஜா அவர்களே, இங்கே இந்த விழாவில் நாங்கள் எல்லாம் மகிழத்தக்க அளவிற்கு வருகை தந்த குமரி முனையிலே வானைத் தொடுகின்ற

அளவிற்கு வள்ளுவருக்கு சிலை வடித்துத் தந்த சிற்பியார் கணபதி ஸ்தபதியார் அவர்களே, இந்த அற்புதமான தமிழைப் பாராட்டுகின்ற – தமிழுக்கு சிறப்பு செய்கின்ற பெரும் கூட்டத்தில் எப்படியும் கலந்து கொள்ள வேண்டுமென்று வருகை தந்துள்ள என்னுடைய அருமை நண்பரும், கவிப்பேரரசுமான தம்பி வைரமுத்து அவர்களே, தொகுப்புரை வழங்கிய தம்பி ஸ்ரீகாந்த் அவர்களே, கலை நிகழ்ச்சி நடத்தவிருக்கின்ற முத்தரசி ரவி அவர்களே, தாய்மார்களே, பெரியோர்களே என் உயிரும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே,

இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு உங்களின் பாராட்டுக்களில், புகழுரைகளில் மிதந்து நான் வழக்கமாக சொல்வதைப் போல – தேனில் போடப்பட்ட எறும்பைப் போல, ஈயைப் போல எம்பி எழ முடியாமல் மிதந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் அந்த அளவிற்கு என்னைப் புகழ்ந்து, இல்லாதது பொல்லாததையெல்லாம் சொல்லி, ஊக்கப்படுத்தியிருக்கிறீர்கள். எதற்காக நீங்கள் என்னை ஊக்கப்படுத்தியிருக்கிறீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதுவும் ஏதோ ஒரு குறிக்கோளோடுதான்; என்னை ஊக்கப்படுத்தினால் இன்னும் உழைப்பான், மேலும் மேலும் உழைப்பான் (கைதட்டல்).

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நம்முடைய பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும் சுட்டிக்காட்டி னார்கள். தமிழர் தலைவர் வீரமணி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தம்பி நம்முடைய

மத்திய அமைச்சர் ராஜா அவர்களும் அதைக் குறிப்பிட்டுச் சொன்னார். கருணாநிதியின் வெற்றிக்குக் காரணம், அவருடைய எழுத்து களுக்கு, கவிதைகளுக்கு, கட்டுரைகளுக்கு சிறப்புக் காரணம், அவருடைய உழைப்புதான் என்று சொன்னார்கள் அல்லவா? அதை இங்கே சுட்டிக் காட்டினார்கள் அல்லவா? அந்த உழைப்பை மேலும் என் வழியிலே பெற வேண்டும், அதற்கு என்ன உபாயம் – இவனைப் புகழ்ந்தால்தான் மேலும் மேலும் உழைப்பான், அப்படி உழைத்தால் அது தமிழுக்கு, தமிழர்களுக்கு அந்த உழைப்பு தமிழகத்தின் வளர்ச்சிக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் எருவாகும் என்ற அந்தக் காரணத்தால்தான் என்னை பாராட்டியதாக நான் கருதுகிறேன், புகழ்ந்ததாக நான் கருதுகிறேன். நான் மேலும் உழைக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தியதாக நான் கருதுகிறேன். உண்மையிலேயே சொல்லுகிறேன். நீங்கள் இங்கே எடுத்துரைத்த அவ்வளவு பெருமைகளும், அவ்வளவு சிறப்புகளும், எனக்கு உரியவை என்று நான் எண்ணிக்கொண்டேனேயானால், இப்போதே நான் வீழ்ந்து விட்டேன் என்று பொருள். (கைதட்டல்) இதற்குப் பிறகும் நான் அடக்கத்தைக் கடைப்பிடித்தால்தான் – அடக்கத்தோடு நடந்து கொண்டால்தான் – அமைதியாக உங்களுடைய அடிவருடி, அன்னைத் தமிழ் காக்கவும், அடிமைப்பட்டுக் கிடக்கின்ற நம்முடைய சமுதாயத்தை தூக்கி நிறுத்தவும் என்னால் இயன்ற வகையில் எல்லாம் உழைப்பை நல்கிட வேண்டும் என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திக் காட்டினால்தான் நான் முழுமையாக ஆனவன் என்ற நிலை உண்டு.

இல்லையென்றால் என்னைப் பாராட்டும் போது, என்னைப் புகழும் போது, நான் என்ன அப்படி பெரிய காரியங்களைச் செய்து விட்டேன் என்று எண்ணுவது – நான் இன்னும் பெரிய காரியங்களைச் செய்வதற்கு என்னைத் தூண்டுவது. இதை விட என்ன பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்று நான் நெஞ்சை நிமிர்த்திக் காட்டுவது என்னை ஆயிரம் அடி தாழ்த்துவது. இந்த இரண்டையும் நான் உணர்ந்திருக்கின்ற காரணத்தால் தான் உங்களுடைய உடன்பிறப்புகளில் ஒருவனாக இருக்க முடிகிறது. உங்களில் பலரை தலைமையேற்று நடத்த முடிகிறது.

அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே, தந்தை பெரியார் அவர்களிடத்திலே நான் கொள்கைகளை, இலட்சியங்களை மாத்திரம் கற்றுக் கொண்டவனல்ல. பண்பாடுகளை, மனிதாபிமானத்தை, மனித நேயத்தை எல்லாம் அவர்களிடத்திலே நான் கற்றுக் கொண்டவன். அப்படி கற்றுக் கொண்ட காரணத்தினாலேதான் நீங்கள் என்னை இந்த மண்டபத்திற்கு அழைத்து இவ்வளவு நேரம் என்னுடைய சிறப்புக்களைப் பற்றி ஒருவர் மாற்றி ஒருவர் பேசி, புகழ்ந்து, பாராட்டி மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்தியிருக்கிறீர்கள்.

பெரியார், பெரியாராக – புகழ் பெற்ற பிறகும், அண்ணா அறிஞருக்கெல்லாம் அறிஞர் என்ற அளவிற்கு ஏற்றம் பெற்ற பிறகும் – அவர் மேலும் மேலும் வளர்ந்ததற்குக் காரணம், மேலும் மேலும் புகழ் பெற்றதற்குக் காரணம் அவர்கள் கடைப்பிடித்த

அடக்கம்தான். அந்த அடக்கம் தான் ஒரு மனிதனை மேலும் மேலும் உயர்த்தக்கூடியது என்பதை நான் அறியாதவன் அல்ல. அறிந்திருக்கின்ற காரணத்தால், நான் என்னைப் பொறுத்தவரையிலே நான் மேலும் மேலும் உயர வேண்டும், என்கின்ற தன்னலத்தோடு அல்ல, என்னை வளர்த்த தமிழ் என்னை வளர்த்த இந்தச் சமுதாயம், என்னை வளர்த்த இந்த நாடு, என்னை வளர்த்த மொழி உணர்வு, என்னை வளர்த்த இந்த இயக்கம், என்னை வளர்த்த சுயமரியாதை எண்ணம் இவைகள் எல்லாம் மேலும் மேலும் ஓங்கிட வேண்டும் என்று நான் கருதுகின்ற காரணத்தினாலே தான், நான் ஒவ்வொரு அடி உயரமாகத் தெரிகிற போதும், அந்த உயரத்திற்கெல்லாம் காரணம் நான் அல்ல, என்னை தூக்கி உலகத்திற்குக் காட்டிய தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் அவர்களை விட அதிகமாக எனக்கு ஊட்டிய அடக்க உணர்வும், அந்த மனிதப் பண்பாடும் தான் இன்றைக்கு இவ்வளவு சிறப்புகளை எனக்கு தந்திருப்பதாக நான் கருதுகின்றேன். எண்ணுகின்றேன். நம்புகின்றேன்: இல்லாவிட்டால் நான் அடிக்கடி கூறுவதைப் போல எங்கேயோ தஞ்சை மாவட்டத்தில், திருக்குவளை என்கிற சின்னஞ்சிறு கிராமத்தில் ஒரு இசைக் குடும்பத்தில், இசையும், விவசாயமும் இரண்டையும் தொழிலாகக் கொண்டு குடும்பம் நடத்திய வாழ்வு நடத்திய ஒரு குடும்பத்தில் பிறந்து, யார் யாரையெல்லாம் இன்றைக்கு நண்பர்களாகப் பெறுகின்ற அளவிற்கு – யார் யாரெல்லாம் கைகுலுக்குகின்ற அளவிற்கு – யார் யாரெல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு – யார் யாரெல்லாம் மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவிக்கின்ற

அளவிற்கு – யார் யாரெல்லாம் பொன்னாடை போர்த்தி புகழ் மாலை சூட்டுகின்ற அளவிற்கு இன்றைக்கு வளர்ந்திருக்கிறேன் என்றால் இவைகள் எல்லாம் தந்தை பெரியார் இட்ட பிச்சை, பேரறிஞர் அண்ணா இட்ட பிச்சை, தமிழ்ச் சமுதாயமே நீ இட்ட பிச்சை என்று நான் ஒப்புக் கொள்கிறேன்.

இப்படி ஒப்புக் கொள்கிற காரணத்தால்தான், இந்தச் சமுதாயத்திற்கு நன்றி தெரிவிக்க என்ன கொடுக்க முடியும் என்னால்? பணம் இருந்தால் பணம் கொடுக்கலாம். அதுவும் அதிகமாக இருந்தால், என் செலவிற்குப் போக மிச்சம் உள்ளதைக் கொடுக்கலாம். கொடுத்துக் கொண்டும் இருக்கிறேன். என்னதான் என்னால் இந்தச் சமுதாயத் திற்குக் கொடுக்க முடியும் என்றால், இங்கே நம்முடைய தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் பேசினார்கள், பேராசிரியர் அவர்கள் பேசினார்கள், புலவர் பெருமக்கள் எல்லாம் பேசினார்கள். அத்தனை பேருடைய பேச்சிலும் ஒரு ஆதங்கம் இருந்ததை அவர்கள் வெளிப்படையாக அதைச் சொல்லாவிட்டாலும், ஒரு ஆதங்கம் இருந்ததை யாரும் மறந்து விட முடியாது. நாம் என்னதான் புகழேணியிலே ஏறியிருந்தாலும், நம்மை ஏற்றுக் கொள்ள முடியாது, இவர்கள் யார்? இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று எண்ணுகின்ற ஒரு கூட்டம் இன்றைக்கும் தமிழகத்திலே இருக்கிறது.

அன்றைக்கு ராஜாஜி என்னைப் பற்றி எழுதிய கவிதையை நம்முடைய தமிழர் தலைவர் இங்கே படித்துக் காட்டினார். அதற்கு நான் எழுதிய பதில் கவிதையையும்

படித்துக் காட்டினார். ஆனால் ராஜாஜி அன்றைக்கு அப்படியொரு கவிதை எழுத நேரிட்ட காரணம் என்ன? அவர்கள் சொல்லக் கூடும். ராஜாஜிக்கு மது விலக்கு கொள்கையிலே இருந்த பற்று என்பதுதான் காரணம் என்று அவர்கள் சொல்லக் கூடும். ஆனால் ராஜாஜிக்கு தமிழ்நாடு ஒன்றின் மீது மட்டும்தான் பற்றா? அவர் தேசியத் தலைவர் அல்லவா? இந்தியாவின் மீது அவருக்கு பற்று கிடையாதா? தமிழ்நாட்டில் மாத்திரம் மது விலக்கு வந்து விட்டால் இங்கேயிருக்கின்ற மனிதர்கள் மாத்திரம் காப்பாற்றப் பட்டால் அவர் தேசியத் தலைவர் அல்ல என்பதை அவரே ஒப்புக் கொள்கிறாரா? என்று யாரும் கேட்கவில்லை. கேட்காததற்குக் காரணம், ராஜாஜி வேறு குலம், இதைக் கேட்கின்ற கருணாநிதியும், பேராசிரியர் அன்பழகனும், தளபதி வீரமணியும் வேறு குலம். அதனால் தான் இன்னமும் அந்த இனப் பாகுபாடு, இனத்தை இழிவுபடுத்துகின்ற தன்மை இன்னமும் தமிழகத்திலே இருப்பதை நாம் உணருகின்றோம். அதைக் களைய வேண்டும், அதைப் பிரச்சாரத்தால் மாத்திரம் களைய முடியாது, நம்முடைய செயல்பாடுகளால், அறநெறிச் செயல்பாடுகளால், அறவழிச் செயல்களால் நம்முடைய உழைப்பால், நாம் எடுக்கின்ற முடிவுகளால், நாம் நம்மிடையே உண்டாக்கிக் கொள்கின்ற ஒற்றுமையினால்தான் இந்த இனத்தை உயர்த்திப் பிடிக்க முடியும். இல்லையேல் அன்றைக்கு ராஜாஜி எப்படி நம்மைத் தாழ்த்தி ஒரு கவிதை எழுதினாரோ, அதைப் போல இன்றைக்கும் தாழ்த்தி கவிதை எழுதுகின்ற கார்ட்டூன் போடுகின்ற, கேலிச் சித்திரம் வரைகின்ற ஏடுகளைக் காணுகின்றோம். நம்மைச் சுற்றி அத்தகைய ஏடுகளைக் காணுகிறோம்.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு காலத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்திருந்த அந்தக் காலத்தில் தி.மு.கழகத்தைச் சேர்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் – அவர் நடத்திய பத்திரிகையில் ஒரு கேலிச் சித்திரம் போட்டார். அது வன்முறையைத் தூண்டக் கூடிய கேலிச் சித்திரமல்ல. இந்தி என்ற கொடுவாளால் வட புலத்திலே உள்ளவர்கள் நேருவின் முதுகிலே குத்துகிறார்கள் என்று. இது நேருவை கொலை செய்வதற்காக தூண்டுகின்ற கார்ட்டூன் அல்ல. நேருவிற்கே தெரியாமல், இந்தி ஆதிக்கம் என்ற கொடுவாளால் அவருடைய முதுகில் குத்துகிறார்கள் என்கின்ற கருத்து அமைந்த ஒரு கார்ட்டூன். அப்போது பெருந்தலைவர் காமராஜர், முதல் அமைச்சர். அவரிடத்தில் என்ன சொன்னார்களோ, அவர் அந்தப் பத்திரிகையைப் பார்த்தாரோ பார்க்கவில்லையோ தெரியாது. அந்தக் கேலிச் சித்திரம் வரைந்த அந்தச் சட்டமன்ற உறுப்பினர் மீது வழக்கு போட்டு சிறையிலே தள்ள ஏற்பாடெல்லாம் ஆகியது. அண்ணா என்னை அழைத்து, "நீ போய் காமராஜரைப் பார்த்து வா – அந்தக் கேலிச் சித்திரத்திலே அப்படி ஒன்றும் கொலை முயற்சி கிடையாது என்று சொல்லி விட்டு வா!" என்று சொன்னார். நான் போய் அதைச் சொல்லி விட்டு வந்தேன். நான் சொன்ன பிறகு காமராஜர் கேலிச் சித்திரம் போட்ட நோக்கத்தைப் புரிந்து கொண்டார். ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கை மாற்றிக் கொள்ளப்படவில்லை. வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் நாம் வெற்றி பெற்றோம். இது அப்போது நடந்த கதை.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், எதற்காகச் சொல்கிறேன் என்றால், நம்மை மிகச் சாதாரணமாக அன்றைக்குக் கருதினார்கள். இன்றைக்கும் கருதுகிறார்கள். நாம் ஒன்றைச் செய்தால், அது பெரும் குற்றமாகக் கருதப்பட்டு, அன்றையதினம் நீதி மன்றத்திலே நாம் நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலை எல்லாம் உருவாயிற்று. அப்படிப்பட்டவர்கள் அதற்காக வாதாடினார்கள், வழக்காடினார்கள். பத்திரிகைகளிலே எழுதினார்கள், பார் பார் எவ்வளவு மோசமாக இந்தத் தி.மு.கழகத்துக்காரன் நடந்து கொள்கிறான் என்றெல்லாம் புழுதியை வாரித் தூற்றினார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை இருக்கிறதா என்றால் இல்லை. இன்றைக்கு நம்மை என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், எப்படி வேண்டுமானாலும் தூற்றலாம், எவ்வளவு நாராச நடையில் வேண்டுமானாலும் நம்மைத் திட்டலாம், நம்மைப் பற்றி எழுதலாம், அமைச்சர் ராஜாவை , தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து, இன்றைக்கு மத்தியில் புகழோடு வீற்றிருக்கின்ற தம்பி ராஜாவை – இங்கே அவர் ஆற்றிய உரையைக் கேட்டீர்கள் – ஒவ்வொரு எழுத்தும் மணி மணியாக (கைதட்டல்) வைரத்தைப் போல் ஜொலிக்கின்ற வார்த்தைகளால் இங்கே அவர் ஆற்றிய உரையைக் கேட்டீர்கள். அந்த ராஜாவை பிணம் ஆக்குவேன், கொல்லுவேன் என்று சொல்லலாம் இங்கே – அதற்கு சட்டம் நடவடிக்கை எடுத்தால் – உடனே நம் மீது பாய்கிறார்கள். இதிலே தாக்கப்பட்டவர்கள் அல்லது அதனால் பாதிக்கப் பட்டவர்கள் நம்மீது பாய்வதை விட,

வேறு யாரோ பக்கத்திலே இருப்பவர்கள் சிண்டு முடிகின்றவர்கள், சிண்டு முடிந்தே பழக்கம் – தனக்குத் தானே முடிந்து கொள்வது மாத்திரமல்ல, மற்ற சிண்டுகளையும் முடிந்தே பழக்கம் – அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு சிண்டு முடிந்தே நம்மிடம் சண்டை மூட்டி நம்முடைய ஆட்சியைக் கவிழ்த்து விடலாம் என்றெல்லாம் கருதுகிறார்கள்.

நான் இந்த ஆட்சி போய் விடுமோ என்ற கவலையிலே இதையெல்லாம் பேசவில்லை. அண்ணாவின் இருதயத்தை இரவலாகப் பெற்று ஆட்சி நடத்துகிறேன் என்றெல்லாம் இங்கே சொன்னார்களே, இன்றைக்குக் கூட அண்ணாவின் இதயத்தை நாம் இரவலாகப் பெற்றோம் என்பதற்குச் சான்றாக சில காரியங்களைச் செய்து விட்டுத்தான், அதற்காக கோப்புகளிலே கையெழுத்துப் போட்டு விட்டுத் தான் இங்கே வந்திருக்கிறேன் என்பதற்காக ஒரு உதாரணத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

சுமை தூக்குகின்ற தொழிலாளர்கள் என்று ஒருசாரார் அரசாங்கத்திலே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மூட்டைகளைத் தூக்கி, அந்தப் பணியினை உணவுத் துறையிலும், மற்ற துறைகளிலும் செய்து கொண் டிருப்பவர்கள். தி.மு. கழக ஆட்சி முதலிலே இருந்தபோது அவர்களுக்கு ஊதியம் அளித்த போது – ஐந்து சதவிகிதம் ஊதிய உயர்வு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி வழங்கப்பட்டு

வந்தது. பிறகு வந்த ஆட்சி உங்களுக்குத் தெரியும், அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தப்பட்டால் போதும் என்று மாற்றி அமைத்தார்கள். இப்போது இன்று காலையில் அந்தக் கோப்பு என்னிடம் விவாதத்திற்காக வந்தது. செயலாளர்களோடு விவாதித்தேன். விவாதித்து எடுத்த முடிவு, இன்றைக்கு மாலைக்குள் ஒரு முடிவெடுக்க வேண்டும், இதற்கு எவ்வளவு நிதி ஆதாரம் வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் கூட நம்முடைய நிதி அமைச்சர் பேராசிரியரோடு பிறகு பேசிக் கொள்ளலாம், அவர் என்ன வேண்டாம் என்றா சொல்லப் போகிறார் என்ற நம்பிக்கையோடு – அந்தச் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஐந்து சதவிகித கூலி உயர்வு என்பதை பத்து சதவிகித கூலி உயர்வு என்று உயர்த்தி ஆணை பிறப்பித்ததோடு – ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் ஊதிய உயர்வு என்று அம்மையார் ஆட்சியிலே மாற்றியதை, சரி ஐந்தும் வேண்டாம், இரண்டும் வேண்டாம், இரண்டிற்கும் பொதுவாக மூன்றாண்டு களுக்கு ஒரு முறை என்று ஆக்கி ஆணை பிறப்பித்து விட்டுத்தான் இங்கே வந்தேன். (பலத்த கைதட்டல்) இதன் மூலம் 18 ஆயிரம் சுமை தூக்கும் தொழிலாளர்கள் பயனடைவார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். செய்தது நானல்ல, அண்ணாவின் இருதயம்.

அதைப் போல இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தி. உங்களுக்கு அறிவிக்கின்றேன். கடந்த ஆண்டு

தொடங்கி இந்த ஆண்டு மலர்ந்துள்ள ஒரு மகத்தான சாதனை. ஆதி திராவிட, பழங்குடியின வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் அகில இந்தியப் பொதுத் தேர்வில் கலந்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், அவர்களைத் தயார்படுத்துவதற்காக அரசுப் பள்ளிகள், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்புப் படித்து அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் இந்த வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து மாணவ மாணவியரைத் தேர்வு செய்து – அவர்கள் அந்தந்த மாவட்டங்களிலோ, பிற மாவட்டங்களிலோ சிறந்து விளங்கும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பிலே சேர்ந்து படிக்க ஒவ்வொருவருக்கும் 28 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு, அது இப்போது அமுலில் இருந்து வருகின்ற மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்.

இந்தத் திட்டத்தின்படி, இந்த ஆண்டில் தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 10 மாணவ, மாணவியர் என மொத்தம் 310 மாணவ மாணவியரைத் தேர்வு செய்து, அவர்கள் தாம் விரும்பும் சிறந்த தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து – அவர்கள் விரும்புகின்ற மேல் நிலைப் பள்ளிகளிலே படிக்கலாம் – படிக்க ஆண்டு ஒன்றுக்கு தலா 28 ஆயிரம்

ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் என மொத்தம் ஒரு கோடியே 73 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அனுமதித்து இன்றைக்கு ஆணை பிறப்பித்து விட்டு வந்துள்ள கை தான் – அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற இந்தக் கருணாநிதியின் கை என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (பலத்த கைதட்டல்)

கவிதை எழுதினேன், கட்டுரை தீட்டினேன், உரையாடல் எழுதினேன் என்றெல்லாம் நீங்கள் என்னைப் புகழ்ந்துரைத் தீர்கள் என்றாலுங்கூட – இதில் எல்லாம் கிடைக்கின்ற மகிழ்ச்சியை விட ஏழையெளியோருக்கு, பாட்டாளி மக்களுக்கு, அவர்கள் பசி போக்கவும், அவர்களுடைய ஆவல் தீரவும், அவர்களுடைய வாழ்வுச் சக்கரம் ஒழுங்காக உருளவும் என்னால் இயன்றதைச் செய்வேன் என்பதுதான் நான் எழுதுகின்ற கட்டுரைகளில் எல்லாம் உயர்ந்த கட்டுரை – நான் எழுதுகின்ற கவிதைகளில் எல்லாம் உயர்ந்த கவிதை. அந்தக் கவிதைகளை நீங்கள் பாராட்டுகின்ற அளவிற்கு நான் தொடர்ந்து தொண்டாற்றுவேன், நீங்கள் வாய்ப்பளித்தால் என்று கூறி இந்த அளவில் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18

****